**<u>கூடுதல் மாவட்ட நீதிமன்றம்</u>**
**<u>விருதுநகர் மாவட்டம் (இருப்பு) திருவில்லிபுத்தூர்</u>**

**EP.No:69/2023 in OS.128/2019** **நாள் 24.03.2026**

**ம.சா.1, திருமதி.A.சத்யா**

**மா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை–**

எதிர்மனுதாரர் வி.கே.கன்ஸ்ட்ரெக்சன் என்ற பெயரில் கட்டிடம் மட்டும் கட்டுமான பணியை செய்து வருகின்றார் என்பதை காண்பிக்ககூடிய ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை. அவர் ஸ்ரீவில்லிபுத்தூர் நகர் பகுதியிலும் அதனுடைய சுற்றுவட்டார பகுதியிலும் பல இடங்களில் வேலை ஆட்களை வைத்துக்கொண்டு கட்டிடம் கட்டி வருகிறார் என்பதை காண்பிக்ககூடிய ஆவணத்தையும் நான் தாக்கல் செய்யவில்லை. அதுபோல் அவர் மாதம் ஒன்றுக்கு சுமார் ரூ.1 லட்சம் வரை வருமானம் ஈட்டி வருகிறார் என்பதை காண்பிக்ககூடிய ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை. அவருக்கு அசையும் சொத்துக்கள் உள்ளது என்பதற்கான என்ன என்ன சொத்துக்கள்என்ற விபரத்தை நான் தாக்கல செய்துள்ள சாட்சிய பிரமாண பத்திரிக்கையில் சொல்லவில்லை. அது போல் அவருக்கு என்ன என்ன அசையா சொத்துக்கள் உள்ளது என்பதன் விபரத்தையும் நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய பிரமாண பத்திரிக்கையில் சொல்லவில்லை. நான் இதே நீதிமன்றத்தில் இந்த எதிர்மனுதாரருக்கு எதிராக E.P.64/2025 என்பதை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இந்த நிறைவேறுதல் மனுவில் தீர்ப்பாணை தொகையாக ரூ.13,64,516/– என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் இந்த எதிர்ம்னுதாரருக்கு எதிராக 2 வது முறையாக தாக்கல் செய்த E.P.64/2025 மனுவின் சார்பு நகல் என்னிடத்தில் காண்பிக்கப்படுபவை என்று சொன்னால் சரிதான். அது **எ.ம.சா.ஆ.1**.எமசாஆ.1 ஆவணத்தில் இதற்கு முன்பு ஏதாவது நிறைவேறுதல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்ற காலத்தில் எதுவும் தாக்கல் செய்து நிலுவையில் இல்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எமசாஆ.1 ஆவணத்திற்கு முன்பு நான் இந்த நிறைவேறுதல் மனு எண்.69/2023 யை தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். நான் தீர்ப்பாணை தொகையை பெற்றுக்கொள்ள வேண்டி ◌நீதிமன்றத்தை ஏமாற்றி முந்தைய நிறைவேறுதல் மனு .69/2023 என்பதை நிலுவையில் உள்ளதை மறைத்து எமசாஆ.1 ஆன நிறைவேறுதல் மனு 64/2025 யை

தாக்கல் செய்துள்ளேன் என்றால் அப்படியில்லை. நீதிமன்றத்தை நான் சுத்தமான கரத்தால் நாடவில்லை என்பதால் நான் தாக்கல் செய்துள்ள இந்த நிறைவேறுதல் மனு எண்.69/2023 யை தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்று சொன்னால் அது சரியல்ல. EP.69/2023 என்ற மனுவில் எதிர்மனுதாரருக்கு அசையும் மற்றும் அசையா சொத்துகள் உள்ளது என்பதை பொறுத்து என்னால் ஆவணங்களை தாக்கல் செய்யப்படவில்லை என்பதால் நான் தாக்கல் செய்துள்ள EP.69/2023 என்ற மனுவை எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்று சொன்னால் அது சரியல்ல. அ.வ.எண்.128/2019 ல் பிறந்த தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை பேரில் தான் இந்த நிறைவேறுதல் மனு EP.69/2023 மற்றம் EP.64/2025 என்று தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை – இல்லை.**

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 24th day of March 2026.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.